மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 03 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2054 ஸ்ரீ சோபகிருது வருடம் ஐப்பசித்திங்கள் 17 ஆம் நாள்

**<u>இடைநிலை மனு எண். 208/2023 -ல்</u>**

**<u>அசல் வழக்கு எண்.14/2022</u>**

குமாரசாமி .... மனுதாரர்/ பிரதிவாதி

// எதிர்//

மகாலெட்சுமி ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. விஜயன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. P.ராதா அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டும், வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது அசல் வழக்கினை மேல் நடத்துவதற்கு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பவர் பத்திரத்தை ஏற்றுக்கொண்டு மனுதாரரை பிரதிவாதியின் பவர்ஏஜெண்ட் என்ற முறையில் வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 3 விதி 1 மற்றும் 2-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுவின் சுருக்கம்</u>** :-

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதியின் பவர்ஏஜெண்ட் ஆவார். பிரதிவாதி அடிக்கடி வேலை நிமித்தம் அடிக்கடி வெளியூர் சென்று வருவதால் அடிக்கடி

நீதிமன்றத்தில் ஆஜராகி சாட்சியமளிக்க இயலவில்லை. மனுதாரருக்கு கடந்த 16.09.2022 ம் தேதியன்று ஸ்பெஷல் பவர் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார். எனவே, மனுதாரரை பவர் ஏஜெண்டாக ஏற்றுக்கொண்டு அசல் வழக்கை மேல் நடத்த வேண்டும் என்று இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-**

அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால், மனுதாரர்/பிரதிவாதிக்கு எதிராக ஏற்றதை ஆற்றுக பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கிரய பத்திரம் ஏற்பட்ட காலத்தில் கிரய தொகை முழுவதையும் பெற்றுக்கொண்டு தாவா சொத்தை வாதியின் அனுபவத்தில் விட்டுவிட்டு கிரயபத்திரத்தை பதிவு செய்து கொடுக்க மறுத்து வந்துள்ளார். பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டும் முன் வராமல் வாதியை ஏமாற்றும் நோக்கத்தில் இருந்து வந்துள்ளார். பிரதிவாதி நீதிமன்றத்தில் முன்னிலையாகி சாட்சியமளித்தால் உண்மை விபரம் தெரிந்துவிடும் என்று சாட்சியமளிப்பத்திலிருந்து தன்னை தவிர்த்துக்கொள்வதற்காக தனக்காக சாட்சியமளிக்க போடப்பட்டுள்ள இம்மனுவினை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4. இம்மனுவில் தீர்வுக்காணப்படவேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.**

**தீர்வு :-**

1. மனு, அபிடவிட், எதிருரை, வழக்காவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது. இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப் படவில்லை.

2. இம்மனுவினை பரிசீலிக்கும்போது, அசல் வழக்கானது, ஏற்றதை ஆற்றுக பரிகாரம் மற்றும் பணம் மீட்பு பரிகாரம்(Recovery of Money)கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரரை அவரது கணவரின் பொது முகவராக ஏற்றுக் கொண்டு அசல் வழக்கை மேல் நடத்த வேண்டும் என்று இம்மனுவானது தாக்கல்

செய்யப்பட்டுள்ளது.

மேலும் இந்த மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பவர் பத்திரத்தை பரிசீலனை செய்யும் போது அந்த பவர் பத்திரமானது "பிரதிவாதி அடிக்கடி வேலை நிமித்தம் வெளியூர் சென்றுவருவதால் அசல் வழக்கு எண். 14/2022)-ல் முன்னிலையாகி சாட்சியமளிக்கவும், வழக்கு சம்மந்தமான நடவடிக்கை மேற்கொள்ளவும், காவல்துறை சம்மந்தமாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், சாட்சிகளை முன்னிலைப் படுத்துவதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டு சிறப்பு அதிகார பத்திரமாக உள்ளது. இந்நிலையில் இந்த மனுவுடன் இணைக்கப்பட்டுள்ள அதிகார பத்திரத்தில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் மற்றும் மனுவில் கூறியுள்ள காரணங்களை கருத்திற்கொண்டும், எதிர்மனுதாரர் தரப்பில் தெரிவித்துள்ள ஆட்சேபணையை கருத்திற்கொண்டும், இம்மனுவினை அனுமதிப்பதால் எதிர்மனுதாரர்/வாதிக்கு எவ்வித இழப்பும் ஏற்படபோவதில்லை என்பதால் நீதியின் பால் இம்மனுவினை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவு என்னால் நேரடியாக கணினியில் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று ( 03.11.2023) அவையறியப்பகரப்பட்டது.

(S/d. A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி(முகூபொ).

**விசாரிக்கப்பட்ட சாட்சிகள் மற்றும் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்:-**

**இரு தரப்பிலும்** : இல்லை

(S/d. A.Seethalakshmi),
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மன்னார்குடி(முகூபொ).